செய்தி வெளியீடு எண்: 201 நாள்: 10.03.2020

## பறவைக் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள்

கேரள மாநிலத்தின், கோழிக்கோடு மாவட்டத்தில் மேற்கு கொடியத்தூர் மற்றும் வெங்கேரி கிராமங்களில் பறவைக் காய்ச்சல் நோய் கண்டறியப்பட்டுள்ளதாக இந்திய அரசு 07.03.2020 அன்று அறிவிப்பு வெளியிட்டது. கடந்த ஐந்து வருடங்களில் தமிழ்நாட்டின் அண்டைய மாநிலங்களான கர்நாடாகா மற்றும் கேரளா மாநிலங்களில் பறவைக்காய்ச்சல் நோய்க்கிளர்ச்சி ஏற்பட்ட போதெல்லாம் தமிழக அரசின் துரித நடவடிக்கை மற்றும் ஏற்கனவே தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் தீவீர நோய்கண்காணிப்பு நடவடிக்கைகளால் இதுவரை தமிழகத்தில் பறவைக்காய்ச்சல் நோய்க்கிளர்ச்சி ஏற்படவில்லை. தற்போது கேரளமாநிலத்தில் ஏற்பட்டுள்ள நோய்க்கிளர்ச்சியினை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க, கால்நடை பராமரிப்புத்துறை அரசு முதன்மைச் செயலர் அவர்களின் அறிவுரையின்படி, கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் அவர்களின் தலைமையில், பறவைக்காய்ச்சல் நோய் தொற்று தமிழ்நாட்டில் பரவாமல் தடுப்பது தொடர்பாக, மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கேரள மாநிலத்தின் எல்லையோரத்தில் அமைந்துள்ள மாவட்டங்களான நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் சார்புத் துறைகளான ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்துறை,போக்குவரத்துத் துறை, காவல் துறைகளுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட மாவட்டங்களின் இருமாநில எல்லையில் அமைந்துள்ள 26 சோதனைச் சாவடிகளிலும் 24 மணி நேரமும் செயல்படும் கண்காணிப்புக் குழுக்கள்

அமைக்கப்பட்டு செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த கண்காணிப்பு குழுக்கள் மூலம் கேரளாவிலிருந்து வாகனங்கள் மூலம் கொண்டு வரப்படும் வரும் கோழிகள் மற்றும் கோழியினம் சார்ந்த பொருட்கள் அனைத்தும் தமிழக எல்லைக்குள் நுழையா வண்ணம் தடை செய்து திருப்பி அனுப்பப்படுகிறது. தமிழகத்தில் நுழையும் இதர வாகனங்கள் கிருமி நாசினி கொண்டு சுத்தப்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டிற்கு நோய் பரவாத வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கேரளாவில் நோய் கிளர்ச்சி ஏற்பட்ட் பகுதியிலிருந்து கடந்த ஒரு மாதத்தில் வாங்கி வரப்பட்ட முட்டைகள், கோழிகள் மற்றும் வாத்துக் குஞ்சுகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது.

அனைத்து மாவட்டங்களிலும் ஒரு கால்நடை உதவி மருத்துவர், ஒரு கால்நடை ஆய்வாளர், 2 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் கொண்ட மொத்தம் 1061 அதிவிரைவு செயலாக்க குழுக்கள் (Rapid Response Team - RRT) மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுக்களுக்குத் தேவையான சுயபாதுகாப்பு உபகரணங்கள் (PPE kits) தேவையான அளவில் இருப்பில் உள்ளது. மேலும் 24 மணிநேரமும் செயல்படக்கூடிய நோய் கட்டுப்பாட்டு அறை கோயம்புத்தூர், கால்நடை பன்முக மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்புகொள்ள கீழ்க்கண்ட தொலைபேசி எண் செயல்பட்டு வருகிறது. இக்கட்டுப்பாட்டு அறையினை 0422–2397614 என்ற தொலைபேசி எண்ணில் தொட.ர்பு கொள்ளலாம்.

தமிழ்நாட்டில்அனைத்து கோழிப்பண்ணைகளிலிருந்தும் கால்நடை நோய்ப்புலனாய்வுப்பிரிவினரால் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஈரோடு மற்றும் நாமக்கல்லில் அமைந்துள்ள கோழியின நோய் கண்டறியும் சோதனைக்கூடத்தின் மூலம் மத்திய

சோதனைக்கூடத்திற்கு பரிசோதனைக்கு அனுப்பி பறவைக்காய்ச்சல் நோய் கண்டறியும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது,

மேலும், பொது சுகாதாரத்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ், வருவாய் துறை,போக்குவரத்துத் துறை, காவல் துறை, வணிகவரித் துறைகள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் ஒருங்கிணைத்து தமிழகத்தில் கேரளாவில் இருந்து பறவைகாய்ச்சல் நோய் வராமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கேரளா எல்லை மாவட்டங்களில் கோழி இறைச்சி விற்பனை செய்யும் இடங்களில் நோய்த் தாக்கம் மற்றும் இறப்பு ஆகியன தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

கேரளா மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு வரும் சரக்கு இரயில் பெட்டிகளை கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யவும் கோழி மற்றும் கோழி உற்பத்தி பொருட்கள், தீவனம் முதலியவற்றை பதிவு செய்வதை தவிற்கவும் கேட்டுக் கொள்ளபட்டது.

அனைத்து சரணாலயங்கள் மற்றும் விலங்கியல் பூங்காங்களில் இடம் பெயரும் பறவைகள், கழுகுகள் போன்றவற்றில் நோய் தாக்குதலோ, இறப்போ ஏற்பட்டால் உடனடியாக சம்மந்தப்பட்ட கால்நடை மருத்துவ அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்க சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையினர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய முட்டை உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு (NECC), நாமக்கல், தலைவர், கோழிப் பண்ணையாளர்கள் சங்கம், நாமக்கல் மற்றும் செயலர், பல்லடம், கறிக்கோழி உற்பத்தியாளர்கள் ஒருங்கிணைப்புக் குழுவினரிடம் கேரள மாநிலத்தை தவிர்த்து பிற மாநிலங்களிலிருந்து கோழிக்குஞ்சுகள், முட்டைகள் மற்றும் தீவனம் போன்ற பொருட்களை

பெறுவதாக இருந்தால் உரிய அரசு அலுவலர்களிடமிருந்து முறையாக சான்றிதழ் பெற்ற பின்னரே கொள்முதல் செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாநிலத்திலுள்ள அனைத்து கோழிப் பண்ணைகளிலும் தீவிர உயிர்ப்பாதுகாப்பு நடைமுறைகளைக் (Strict Biosecurity measures) கையாள அறிவுறுத்தப்பட்டு கேரள மாநிலித்திலிருந்து தமிழக மாநிலத்திற்குள் பறவைக்காய்ச்சல் பரவாத வண்ணம் அரசால் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**